**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 101 / 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW : 15** |
| **Name** | **:** | **திரு. முருகன்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2022**

**முதல் விசாரணை :**

நான் மதுரை, கீழத்துரை, housing board-ல் குடியிருந்து வருகிறேன். ஆஜர் எதிரியைத் தெரியாது. தற்போது நீதிமனற்த்திற்கு சாட்சியம் சொல்ல வந்திருக்கிறேன். கொலை நடந்ததாகச் சொன்னார்கள். யார் யாரைக் கொலை செய்தார்கள் என்று தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு குறுக்கு விசாரணை செய்வதற்கு அரசு தரப்பு வழக்கறிஞர் அனுமதி கோரியதன் பேரில் குறுக்கு விசாரணை செய்வதற்கு அனுமதிக்கப்பட்டார்)**

**அரசு தரப்பில் கு.வி.**

ஆஜர் எதிரியும் நானும் பக்கத்து பக்கத்து வீட்டில் தான் குடியிருக்கிறோம் என்றால் சரியல்ல. நான் அவரை பார்த்ததே இல்லை. கடந்த 16.01.2016 ம் தேதி மதியம் சுமார் 02.40 மணியளில் ஆஜர் எதிரி மகாத்மாகாந்தி நகரில் குடியிருந்த போது ஆஜர் எதிரிக்கும் அவரது மனைவி ரோசியுடன் அடிக்கடி சண்டை போட்டு தகறாறு செய்துவந்தார் என்றும், நான் தான் அவ்வப்போது சென்று சண்டையை சமாதானம் செய்து வருவேன் என்றும், 16.01.2016 ம் தேதி ஆஜர் எதிரிக்கும் அவரது மனைவி ரோசிக்கும்

சண்டை ஏற்பட்டதில், ஆஜர் எதிரி அவரது மனைவி ரோசியை சுத்தியலால் தலையில் அடித்து இரத்தக்காயம் ஏற்படுத்தினார் என்றும் நான் அதை நேரில் பார்த்தேன் என்றும் அப்போது, எதிரியின் வீட்டின் அருகில் இருக்கும், ஜெயசுதா எதிரி கையில் இரத்தக்கரையுடன் வருவதைப் பார்த்து என்னப்பா ஆச்சு ஏன் பா இப்படி வர்ர என்று கேட்டு சத்தம் போட்டதாகவும், அப்போது ஆஜர் எதிரி மெயின் ரோட்டைத்தாண்டி வேகமாக போய்விட்டதாகவும், எதிரியின் மனைவியை மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தோம் என்றும் தற்போது, ஆஜர் எதிரி எனக்கு வேண்டிய நண்பர் என்பதால் எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

இல்லை

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | : | **SC NO. 101 / 2017** |
| **Deposition of witness for** | : | **PW : 16** |
| **Name** | : | திரு. பாலு |
| **Father's Name** | : | |
| **Village** | : | |
| **Taluk** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது, மதுரை மாநகர், மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில், சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 ம் ஆண்டு நான் B3 தெப்பக்குளம் காவல்நிலையத்தில் தலைமை காவலராக பணிபுரிந்தேன். அந்த சமயம், கடந்த 28.01.2016 ம் தேதி, தெப்பக்குளம் காவல்நிலைய குற்ற எண்.55/2016 பிரிவு 307 இதச மாற்று 302 இதச வழக்கில் மதுரை அரசு ராஜாஜி மருத்துவமனையில் தலையில் காயம்பட்டு வார்டு எண்.101 ல் சிகிச்சையில் இருந்த ரோசி க/பெ. வெனீஸ், சிகிச்சையில் இருந்தவர், சிகிச்சை பலன் இன்றி இறந்துவிட்டதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் ஆய்வாளர் அவர்கள் மேற்படி இறந்த ரோசியின் பிரேதத்திற்கு பிரேத பரிசோதனை செய்ய ஆய்வாளர் அவர்கள் கொடுத்த வேண்டுகோள் கடிதத்தையும், கடவுச் சீட்டும் பெற்றும் மதுரை, வருவாய் கோட்டாட்சியர் அவர்களிடம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். வருவாய் கோட்டாட்சியருடன் அரசு ராஜாஜி மருத்துவமனையில் சவக்கிடங்கில் இருந்த ரோசியின் பிரேதத்தை அடையாளம் காட்டி பிரேத பரிசோதனைக்கும் வருவாய் கோட்டாட்சியரின் விசாரணைக்கும் உதவியாக இருந்தேன். பின்னர்

காவல் ஆய்வாளர் பிரேத பரிசோதனைக்காக கொடுத்த வேண்டுகோள் கடிதத்தை மதுரை மருத்துவக் கல்லூரி பேராசிரியர் அவர்களிடம் கொடுத்தேன். பேராசிரியர் அவர்கள் இறந்த ரோசியின் பிரேதத்தை பிரேத பரிசோதனைக்காக அங்க மச்ச அடையாளம் காட்டியும் பிரேத பரிசோதனைக்கு உதவியாக இருந்தேன். அதன் பிறகு பிரேதத்தின் உடல் உள்உறுப்புகளை இரசாயன பகுப்பாய்விற்காக 29.01.2016 ம் தேதி வட்டார தடய அறிவியல் ஆய்வகம், மதுரை அவர்களிடம் ஒப்படைத்து அத்தாட்சி பெற்று நிலையம் வந்து ஆய்வாளரிடம் விவரம் சொல்லி கடவுச் சீட்டை ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

ஆய்வாளர் எனக்கு கடவுச் சீட்டு கொடுப்பதற்கு முன்புவரை இந்த வழக்கு பற்றிய விவரங்கள் எனக்குத் தெரியுமா என்றால் தெரியாது. அரசு மருத்துவமனையில் சிகிச்சையில் இருந்த நபர் இறந்துவிட்டால் அது குறித்த Death intimation காவல்நிலையத்திற்கு வரும். சிகிச்சையில் இருந்த நபர் இறந்துவிட்டதாக ஆய்வாளருக்கு தகவல் வரும்போது நான் காவல்நிலையத்தில் இல்லை. வேறு பணியில் இருந்தேன். இந்த வழக்கு சம்பந்தமாக என்னை ஆய்வாளர் அழைக்கும்போது என்ன நேரத்தில் அழைத்தார் என்றால் ஞாபகம் இல்லை. நான் முதல் விசாரணையில் சொன்ன பணிகள் அனைத்தும் நான் செய்தேன் என்பதற்கு ஒரே ஆவணம் கடவுச்சீட்டுத்தான். அதைத்தவிர வேறு ஆவணங்கள் இல்லை. அந்த கடவுச் சீட்டில், நான் என்ன பணிக்காக, யாரைச் சென்று பார்க்கவேண்டும், என்ன மனுக்களை, கடிதங்களை கொடுக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கும். நான் ஆய்வாளரிடம் ஒப்படைத்த கடவுச்சீட்டில் நான் யாரை எத்தனை மணிக்கு எங்கு பார்த்தேன் என்று கடவுச் சீட்டில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்றால் அவசியம் இல்லை. கடவுச்சீட்டில் நான் செய்த பணிகள் குறிக்கப்பட்டிருக்கும். ஆய்வாளர் என்னை விசாரணை செய்த போது எனக்கு

வழங்கிய கடவுச்சீட்டைக்காட்டி விசாரிக்கவில்லை. தெப்பக்குளம் காவல்நிலையத்தில் இருந்து RDO அலுவலகத்திற்கு எந்த நேரத்திற்கு வந்தேன் என்று ஞாபகம் இல்லை. அன்றைய தினம் நான் செய்த பணிகள் குறித்து நேரம் ஞாபகம் இல்லை. நான் காவல்நிலையத்தில் இருந்து கடவுச் சீட்டை பெற்றவுடன் RDO அலுவலகத்திற்கு வந்தேன். RDO அலுவலகம், அரசு மருத்துவமனையில் இருந்து 1 கிமீ தூரத்தில் உள்ளது. நான் RDO அலுவலகம் வரும்போது, இந்த வழக்கில் இறந்த நபரின் உறவினர்களை நான் பார்க்கவில்லை. பிரேதத்தை எனக்கு அடையாளம் யார் காட்டினார்கள் என்றால் மருத்துவமனையில் பணிபுரிந்த அலுவலர்தான் அடையாளம் காட்டினார். ஆய்வாளர் என்னை விசாரணை செய்தபோது யார் எனக்கு பிரேதத்தை அடையாளம் காட்டினார்கள் என்று விசாரிக்கவில்லை. நான் மருத்துவமனை சென்ற போது ஆய்வாளர் அங்கு இருந்தாரா என்று ஞாபகம் இல்லை. RDO அலுவலகத்தில் இருந்து மருத்துவமனைக்கு நான் தனியாக சென்றேன். பிரேத விசாரணைக்கு நான் சம்மன் சார்பு செய்து எந்த வேலையும் செய்யவில்லை. பஞ்சாயத்தார்கள் யார், யார், எங்கு இருந்தார்கள் என்று எனக்குத் தெரியாது. பிரேதம் அடையாளம் பிரேத வைப்பறையில் வைத்துதான் அடையாளம் காட்டப்பட்டது. பிரேத வைப்பறையில் நான் பிரேதத்தை அடையாளம் காட்டும்போது, நான், RDO, மற்றும் மருத்துவர் தவிர வேறு யாரும் இல்லை. மருத்துவருக்கு பிரேத பரிசோதனைக்கு ஆய்வாளர் எனக்கு எங்கு வைத்து வேண்டுகோள் கடிதம் கொடுத்தார் என்றால் பிரேத வைப்பறையில் வைத்து கொடுத்தார். ஆய்வாளர் பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கும் போது RDO வும் உடன் இருந்தார். அரசு மருத்தவமனையில் இருந்து மருத்துவக் கல்லூரிக்கு செல்ல சுமார் 1/4 மணி நேரம் ஆகும். அங்கு வைத்துதான் பிரேத பரிசோதனைக்கு வேண்டுகோள் கடிதம் கொடுக்கவேண்டும். RDO பிணவைப்பறையில் வைத்து பிரேதத்தை பார்த்து, ஆவணங்கள் எல்லாம் தயார் செய்த பிறகு தான் ஆய்வளரிடம் பிரேத பரிசோதனைக்கான வேண்டுகோள் கடிதம் பெற்றேன். நான் அரசு மருத்துவமனையில், RDO மற்றும் ஆய்வாளர் தவிர வேறு

யாரையும் சந்திக்கவில்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன தேதியில் எந்த பணியிலும் இல்லை என்றால் சரியல்ல. RDO க்கு பிரேத விசாரணைக்கு உடன் இருந்ததாக சொல்வது எல்லாம், பின்னிட்டு ஆவணங்கள் தயார் செய்வதற்காக சாட்சி வேண்டும் என்பதற்காக ஆய்வாளரின் வேண்டுகோளின் படி பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் பணிகள் எதுவும் மேற்கொள்ளவில்லை என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal Procedure)
- - - - -

# IN THE COURT OF THE SESSIONS JUDGE, MAHALIR NEETHIMANDRAM, MADURAI.

| | | |
|---|---|---|
| **Case No.** | **:** | **SC NO. 101 / 2017** |
| **Deposition of witness for** | **:** | **PW : 17** |
| **Name** | **:** | **திரு. விஸ்வநாதன்** |
| **Father's Name** | **:** | |
| **Village** | **:** | |
| **Taluk** | **:** | |
| **Caste** | **:** | |
| **Calling** | **:** | |
| **Religion** | **:** | |
| **Age** | **:** | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **15.06.2022**

**முதல் விசாரணை :**

நான் தற்போது, C2 கிரைமில் சிறப்பு சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 28.01.2016ம் தேதி நான் தெப்பக்குளம் காவல்நிலையத்தில் பணிபுரிந்தேன். அன்று தெப்பக்குளம் காவல்நிலைய குற்ற எண்.55/2016 பிரிவு 307 இதச வழக்கில் சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை பெற்று உதவி ஆணையர், சட்டம் ஒழுங்கு மற்றும் துணை ஆணையர் அலுவலகம் சென்று ஒப்படைத்தேன். காவல் ஆணையர் மற்றும் காவல்துறை தலைவர் அவர்களுக்கு அன்றைய தினம் 12.40 மணிக்கும், காவல் துணை ஆணையர் அவர்கள் அலுவலகத்திலும், மதுரை நீதித்துறை நடுவர் எண்.1 அவர்களுக்கு அன்றைய தினம் 13.30 மணிக்கு ஒப்படைத்தும், அத்தாச்சி பெற்று, நிலையம் வந்து ஆய்வாளரிடம் ஒப்படைத்தேன். இந்த வழக்கில் இறந்த நபர் பெயர் ரோசி க/பெ.வெனீஸ் ஆகும். ஆய்வாளர் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் கு.வி.</u>**

நான் முதல் விசாரணையில் சொன்ன பணிகள் சம்பந்தமாக கடவுச் சீட்டு மற்றும் அத்தாட்சி தவிர வேறு எந்த ஆவணங்களும் இல்லை. ஆய்வாளர் என்னை விசாரித்த போது, எனக்கு வழங்கிய கடவுச்சீட்டையும், அத்தாட்சியையும் ஒப்படைத்தேன். குற்றம் சம்பந்தமான எந்த ஒரு ஆவணத்தையும் முதன் முதலில் நீதிமன்றத்தில் தான் ஒப்படைக்க வேண்டும் என்று எனக்குத் தெரியும். இந்த வழக்கில் அந்த நடைமுறை பின்பற்றப்படவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் நீதிமன்றத்திற்கு கடைசியாகத்தான் ஆவணம் ஒப்படைக்கப்பட்டது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் சொன்ன பணிகளை நான் செய்யவில்லை என்றாலும் வழக்கில் சாட்சி வேண்டும் என்பதற்காக பின்னிட்டு என்னை சாட்சியாக சேர்த்து ஆய்வாளரின் வேண்டுகோளின் படி சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

அமர்வு நீதிபதி,
மகளிர் நீதிமன்றம்,
மதுரை